SC No: 59/2022

அ.சா.1

பெயர்: திருமதி. பாரதி. க.பெ. கதிரேசன்

தேதி : 27.01.2026

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவ நடந்த இடத்தில் இருந்து போலீஸ் ஸ்டேசன் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது . சம்பவ இடத்தில் இருந்து போலீஸ் ஸ்டேசன் போனதற்கு எவ்வளவு நேரமானது என்று சொன்னால் 3/4 மணி நேரமாகி இருக்கும் . அங்கு இருந்து ஆட்டோவில் போலீஸ் ஸ்டேசன் போனேன் . இன்றைய தேதி வரையில் எனக்கு விவாகரத்து ஆகவில்லை என்றால் சரிதான் . இந்த சம்பவத்திற்கு முன்பாக இருவீட்டாரும் சேர்ந்து ஒரு நோட்டரி வழக்கறிஞர் முன்பாக ஒரு அக்ரிமெண்ட் ஒன்றை போட்டுக்கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்தப்படி குழந்தையை அவரே வைத்து கொள்ளலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. சம்பவம் நடப்பதற்கு எத்தனை நாள் முன்பாக அந்த அக்ரிமெண்ட் போடப்பட்டது என்று சொன்னால் 01 ம் தேதி அக்ரிமெண்ட் போடப்பட்டது, 04 ம் தேதி இந்த சம்பவம் நடைபெற்றது.

(2) போலீஸ் விசாரணையில் குழந்தை யாரிடம் விடப்பட வேண்டுமென்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான் . சம்பவத்திற்கு முன்பாக போலீஸ் ஸ்டேசனில் வைத்து பஞ்சாய்த்து நடைபெற்றதா என்று சொன்னால் இல்லை காவல் நிலையத்திற்கு அருகே வைத்து தான் அந்த பஞ்சாய்த்து நடைப்பெற்றது , காவல் நிலையத்தில் நடைபெறவில்லை. 16.09.2021 தேதியில் இருந்து என் குழந்தையை

எடுத்துக்கொண்டு நான் என் அம்மா வீட்டிற்கு போய்விட்டேன் என்று சொன்னால் அம்மா வீட்டிற்கு போகவில்லை , ரகு வேலை செய்யும் இடத்திற்கு போய் விட்டேன் . ரகுவின் சொந்த ஊர் ஓசூர் கிடையாது என்றால் சரிதான். கீழ்பூங்குருத்தி தான் அவருக்கு சொந்த ஊர் . ஓசூரில் ரகு வீடு எடுத்து தங்கி இருந்தார் என்றால் சரிதான் . நான் என் கணவரை வீட்டு ரகுபதியுடன் இருந்து வரும் விவரம் சம்பவத்திற்கு முன்பாக என் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியுமா என்று சொன்னால் அவர்களுக்கு எல்லாம் தெரியாது. 01.10.2021 ல் பர்கூர் காவல் நிலையத்தில் எனக்கும் என் கணவருக்கு ஏற்பட்ட பிரச்சனை குறித்து விசாரணை நடந்தது என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 01.10.2021 ல் கொடுக்கப்பட்ட புகார் என் கணவரால் கொடுக்கப்பட்ட புகாராகும் . அந்த புகாரில் என் மனைவி மற்றும் குழந்தையை காணவில்லை என்று என் கணவர் புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான் . அப்பொழுது பர்கூர் காவல் நிலையத்தில் இருந்து என்னையும் , ரகுபதியையும் அழைத்து வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

(3) நான் அப்போது போலீஸ் ஸ்டேசனில் வைத்து ஏதேனும் எழுதிக்கொடுத்தேனா என்று சொன்னால் நான் ஏதும் எழுதிக்கொடுக்கவில்லை , கதிரேசன் தான் எழுதிக்கொடுத்தார் . மீண்டும் 04.10.2021 அன்று வரச்சொன்னார்கள் என்றால் சரிதான் . 01.10.2021 ம் தேதியன்று அக்ரிமெண்ட் ஒன்று எழுதப்பட்டு அந்த அக்ரிமெண்டில் குழந்தையை என் கணவர் வைத்துக்கொள்ளலாம் என்று எழுதினார்கள் என்றால் சரிதான்.

**(4)** என்னுடைய புகாரில் 04.10.2021 தேதியன்று காவல் நிலையத்திற்கு நான் விசாரணைக்கு வேண்டி சென்றதாக ஏதும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . ஊர்காரர்கள் முன்னிலையில் பேசிக்கொள்வதாக சொல்லி நான் சென்றதாக சொல்லியுள்ளேன். அந்த அக்ரிமெண்டில் நானும் கதிரேசனும் கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான் . அவ்வாறு கையெழுத்து போடும்போது எந்த ஊர்காரர்களும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றால் உங்கள் விருப்பம் தான் என்று சொல்லிவிட்டாகள் . 04.10.2021 தேதி ஊர்காரர்களுடன் பிரச்சனை ஏற்ப்பட்ட பிறகு நான் மற்றும் ரகுபதி திரும்பி சென்றபோது என் அம்மா , அப்பா உடன் வரவில்லை என்றால் சரிதான் . 04.10.2021 தேதியன்று என் அப்பா , அம்மா போலீஸ் ஸ்டேசன் அருகே வந்து இருந்தார்கள். 01.10.2021 தேதியன்று என்னை விசாரித்தவர் எஸ் .ஐ –யா , இன்ஸ்பெக்டரா என்று சொன்னால் அந்த விவரம் தெரியவில்லை . அந்த போலீஸ் அதிகாரி நம்பர் என் போனில் இருந்தது என்று சொன்னால் அது தவறு. 01.10.2021 அன்றும், 04.10.2021 அன்றும் என்னுடன் ரகுபதி வந்திருந்தார் என்றால் சரிதான் . என் புகாரில் கொடுத்துள்ள விலாசம் என் கணவர் வீட்டின் விலாசம் என்றால் சரிதான்.

**(5)** 04.10.2021 அதற்கு முந்தைய நாள் நைட் என் அப்பா , அம்மா ஆகியோர் கணம்பூர் என்ற இடத்தில் இருந்தார்கள் , நான் பேராண்டப்பள்ளியில் ரகுபதியுடன் இருந்தேன் . 04.10.2021 அன்று நான் , கதிரேசன் ஆகியோர் காலை 11.00 மணிக்கு சந்தித்தோம். அப்பொழுது நான் குழந்தையை ஒப்படைப்பதற்கு வந்திருந்தேன் என்றால் சரிதான்.

பேச்சுவார்த்தை நடந்த இடம் போலீஸ் ஸ்டேசன் வாசலில் என்றால் தவறு . போலீஸ் ஸ்டேசனுக்கு எதிர்த்தார் போல் உள்ள பில்டிங்கு அருகே அந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது . அந்த சமயத்தில் கைகலப்பு ஏதும் ஆகவில்லை என்று சொன்னால் கைகலப்பு ஆனது, எங்களுடைய தரப்பில் ஆதரவாக பேசுவதற்கு ரகுபதி மற்றும் ரகுபதி நண்பர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான் . அந்த பேச்சுவார்த்தை போலீஸ் ஸ்டேசனுக்கு எதிரித்தார்போல் உள்ள பில்டிங் அருகே எவ்வளவு நேரம் நடைபெற்றது என்று சொன்னால் சுமார் 1/2 மணி நேரம் நடைபெற்றது. தற்போது குழந்தை கதிரேசனுடன் தான் இருக்கிறது. குழந்தையை நான் போய் பார்ப்பதில்லை என்றால் சரிதான். எனக்கு தற்போது ஒரு குழந்தை பிறந்துள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 01.10.2021 அன்று விசாரணைக்கு போனபோது நான் குழந்தையை கொண்டுபோகவில்லை என்றால் அது தவறு.

**(6)** 01.10.2021 தேதி அன்றே குழந்தையை ஏன் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் 01.10.2021 தேதியன்றே குழந்தை ஒப்படைக்கப்பட்டது. 4.10.2021 தேதியன்று குழந்தை யார் பார்த்துக்கொள்வது என்பது சம்பந்தகமும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் அது சம்பந்தமாக பிரச்சனை ஏற்படவில்லை. குழந்தை சம்பந்தமான பிரச்சனை 01.10.2021 தேதியோட முடிந்துவிட்டது. 01.10.2021 ல் ஏற்படுத்தப்பட்ட அக்ரிமெண்டில் என் கணவர் என்னை சந்தேகப்பட்டு பிரச்சனை செய்கிறார் என்ற விவரம் இல்லை என்று சொன்னால் அது தவறு . 01.10.2021 ல் போடப்பட்ட அக்ரிமெண்டில் யாரை பற்றி எந்த குறையையும் சொல்லிக்கவில்லை என்று சொன்னால் அது தவறு.

01.10.2021 தேதியன்று போடப்பட்ட ஒப்பந்தம் என்னிடம் உள்ளதா என்று சொன்னால் கேஸ் கொடுத்தபோதே அதையும் இணைத்து கொடுத்துவிட்டேன். புகார் கொடுக்கும்போது , அக்ரிமெண்டும் இணைத்து கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான் . புகாரினை எழுதிய நபரின் பெயர் எனக்கு ஞாபகவில்லை.

**(7)** 04.10.2021 தேதி நடந்த பஞ்சாய்த்தில் உறவினர்கள் அல்லாத ஊர்காரர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்று சொன்னால் அவர்கள் பக்கத்தில் சுமார் 10–15 பேர் இருந்தார்கள் அவர்கள் உறவினர்களா என்பது தெரியாது. யார் தலைமையில் அந்த பஞ்சாய்த்து நடைபெற்றது விவரம் எனக்கு ஞாபகமில்லை . என்னுடைய போனை போலீசார் வாங்கி பார்த்தார்களா என்றால் வாங்கி பார்க்கவில்லை . 01.10.2021 ல் போடப்பட்ட அக்ரிமெண்டை 04.10.2021 அன்றைய தினம் எடுத்து போக வேண்டிய காரணம் என்னவென்றால் 01.10.2021 போடப்பட்ட அக்ரிமெண்டை என் அப்பாவிடம் கொடுத்து சென்றுவிட்டேன் அதனை 04.10.2021 தேதி அவரிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். என் தரப்பில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் யார் என்று சொன்னால் எனக்கு தெரிந்து என் அப்பா , அம்மா போட்டார்கள். சேர்ந்து வாழ்ந்தபொழுது போடப்பட்ட நகையை திருப்பி கொடுக்க வேண்டுமென்று அக்ரிமெண்ட் உள்ளது என்று சொன்னால் அக்ரிமெண்ட் உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது.

**(8)** என் கணவர் எனக்கு நகை வாங்கிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது தவறு. சம்பவம் நடந்த பிறகு ஹாஸ்பிட்டலில் சம்பவத்தை பற்றி டாக்டர் விசாரித்தாரா என்று சொன்னனால் நான் ஹாஸ்பிட்டல் ஏதும்

போகவில்லை. நான் சம்பவ இடத்தில் இருந்து நேராக காவல் நிலையம் போய்விட்டேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து ஒரு போக்கு வண்டியை பிடித்து போய்விட்டேன் என்று சொன்னால் அங்கு இருந்த ஆட்டோவில் காவல் நிலையம் போனேன். என் உடன் ரகுபதியின் தங்கச்சி வீட்டுகாரர் சக்திவேல் ஆட்டோவில் வந்தார். நாங்கள் இரண்டுபேர் மட்டும் தான் ஆட்டோவில் காவல் நிலையம் வந்தோம் . சக்திவேல் எங்கே குடியிருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது . நான் போலீஸ் ஸ்டேசனுக்கு ஆட்டோவில் போகும்போதே ரகுபதியின் உறவினர்களுக்கு தகவல் கொடுத்துக்கொண்டே போனேன் என்றால் அது தவறு. நான் காவல் நிலையத்திற்கு போனபோது மணி 3.00 இருக்கும். சம்பவம் நடந்தது 12.30 மணி என்று சொன்னால் இல்லை 1.30–1.45 மணி இருக்கும். என்னுடைய புகாரில் 04.10.2021 அன்று பஞ்சாய்த்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

(9) அரைமணி நேரம் பஞ்சாய்த்து போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருந்து 1.30 மணி நேரத்தில் ஓசூர் போகமுடியும் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது . காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபிறகு அன்றைய தினம் நான் என் பெரியம்மா வீட்டிற்கு போய்விட்டேன். என் பெரியம்மா வீடு சூளகிரியில் உள்ளது. நான் ஹாஸ்பிட்டலுக்கு போய் ரகுபதியை பார்க்கவில்லை என்றால் சரிதான் . சம்பவத்திற்கு பிறகும் ரகுபதியின் குடும்பத்தார் என்னுடன் தொடர்பில் தான் உள்ளார்கள் என்றால் அது தவறு . நான் புகார் எழுதும் போது உடன் சக்திவேல் இருந்தார் என்றால் சரிதான். என்னையும் , சக்திவேலையும்

விசாரித்தபிறகு தான் போலீசார் என்னிடம் புகார் வாங்கினார்கள் என்று சொன்னால் நான் புகாரை எழுதி எடுத்துப்போனேன். எங்கு வைத்து புகாரை எழுதினேன் என்று சொன்னால், போலீஸ் ஸ்டேசன் முன்பாக ஒரு ஆள் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொடுத்தார்.

(10) அந்த ஆள் எனக்கு தெரிந்தவரா என்று சொன்னால் தெரிந்தவர் இல்லை. புகாரை ஆய்வாளரிடம் கொடுக்க வேண்டுமா, அல்லது உதவி ஆய்வாளரிடம் கொடுக்க வேண்டுமா என்ற முடிவை யார் எடுத்தார்கள் என்று சொன்னால் எனக்கு புகாரினை எழுதிக்கொடுத்தவர் தான் என்னிடம் சொன்னார். புகார் எழுதிக்கொடுத்தவருக்கு ஏற்கனவே புகார் எழுதும் பழக்கும் உள்ளது என்றால் சரிதான். அவருக்கு எழுதப்படிக்க தெரியும் அதனால் புகார் எழுதி கொடுக்கும்படி சொன்னேன். அந்த புகார் எழுதிய நபர் கடை ஏதும் வைத்திருந்தாரா என்று சொன்னால் கடை ஏதும் வைத்திருக்கவில்லை, வண்டி பக்கத்தில் நின்றுக்கொண்டு இருந்தார். அந்த வண்டி இருசக்கர வண்டியாகும். சம்பவ இடத்தில் இருந்து பர்கூர் போலீஸ் ஸ்சேடன் பக்கம் என்றும், தாலுக்கா போலீஸ் ஸ்டேசன் பக்கம் என்று சொன்னால் எனக்கு அந்த விவரம் தெரியாது, ஆட்டோகாரரிடம் கேட்டபோது இந்த இடத்திற்கு இந்த போலீஸ் ஸ்டேசன் தான் வரும் என்று சொன்னால்.

(11) ஆட்டோகாரர் சென்னதன்பேரில் தான் நான் தாலுக்கா காவல் நிலையத்திற்கு போனேன் என்றால் சரிதான். போலீசார் என்னை புகார் கொடுத்தபோது தான் என்னை விசாரித்தார்கள் அதன்பிறகு விசாரிக்கவில்லை. இந்த வழக்கில் எதிரிகள் பிணைக்கு வந்தபோது நான்

ஆட்சேபனை தெரிவித்தேன் என்று சொன்னால் அவ்வாறு ஏதும் தெரிவிக்கவில்லை. இந்த வழக்கை நடத்துவதற்கு அரசாங்க வக்கீல் தவிர நான் வேறு ஏதேனும் வழக்கறிஞரை நியமித்துள்ளேனா என்று சொன்னால் அவ்வாறு ஏதும் நியமிக்கவில்லை . என் சார்பாக அரசு வழக்கறிஞருக்கு உதவுவதற்காக ஒரு வழக்கறிஞர் நியமிப்பதற்காக நான் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . இன்றைய தினம் ரகுபதியின் உறவினர்கள் கோர்டுக்கு வெளியே நின்றுக்கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் அந்த விவரம் தெரியாது . சின்ன மட்டாரப்பள்ளியை சேர்ந்த வெங்கடேசனை தெரியுமா என்று சொன்னால் அவரை பார்த்து இருக்கிறேன் ஆனால் அவ்வளவாக அவரை எனக்கு தெரியாது . அதே ஊரை சேர்ந்து சின்னசாமி , சென்னப்பன், வெங்கடசேன் , ராஜசேகர் ஆகியோரை தெரியுமா என்று சொன்னால் தெரியாது . 01.10.2021 தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது என் அப்பா சின்னசாமி , அம்மா இலட்சுமி, கணம்பூரை சேர்ந்த சின்னசாமி , சின்னராஜ் , திம்மராயன் ஆகியோர் வந்திருந்தார்கள் என்று சொன்னால் சின்னசாமி , லட்சுமி, மற்றொரு சின்னசாமி, சின்னராஜ் ஆகியோர் வந்திருந்தார்கள் . திம்மராயன் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

**(12)** 01.10.2021 நான் உதவி ஆய்வாளருக்கு ஒரு கடிதம் ஒன்றை கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்று சொன்னால் என் கணவர் கதிரேசன் கொடுத்த புகாரினை திரும்ப பெறுவதற்காக அந்த கடிததத்தில் கையெழுத்து வாங்கினார்கள் . அந்த கடிதத்தில் என் அப்பா , அம்மா, சின்னராஜ் கணம்பூர் சின்னசாமி மற்றும் திம்மராயன் , வெங்கடேசன்

ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான் . இந்த ஆவணத்தின்படி என் மகன் என்னுடனே இருப்பான் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் . 01.10.2021 எழுதிக்கொடுத்த கடிதத்தில் நான் என் பெற்றோருடன் தான் செல்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன் என்றும் , ரகுபதியுடன் செல்வதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான் . இந்த ஆவணத்தின்படி நீதிமன்றத்தின் மூலமாக நான் விவாகரத்து பெற்றுக்கொள்வதாக முடிவு எடுத்துள்ளதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி 01.10.2021 தேதியிட்ட கடிதம் **EX.D.1** ஆகும். அன்றைய தினம் கதிரேசன் ஒரு கடிதம் ஒன்றை காவல் நிலையத்தில் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான் .

(13) அந்த கடிதம் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கபடுவது என்று சொன்னால் அது தவறு . அந்த கடிதத்திலுள்ள கையெழுத்து கதிரேசன் கையெழுத்து என்று சொன்னால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் எழுதிக்கொடுத்தவாறு கதிரேசனும் ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் சரிதான் . அந்த கடிதத்தில் கதிரேசன் என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தாார் என்றால் சரிதான் . அவ்வாறு வாழ விருப்பமில்லை காரணத்தினால் அவர் அம்மா வீட்டிற்கு போய்விட்டதாக கடிதத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றும் , அதற்கு தான் சம்பந்தம் தெரிவிப்பதாக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நீதிமன்றம் மூலமாக விவாகரத்து வாங்கிக்கொள்வதாக அதில் அவர் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அவ்வாறு ஏதும் சொல்லவில்லை.

(14) போலீஸ் நிலையத்தில் 01.10.2022 அன்று கொடுத்த கடிதத்தில் நீதிமன்றம் மூலமாக விவாகரத்து வாங்கிக்கொள்வதாக கதிரேசன் தெரிவித்திருந்தார் என்றும் தற்போது அதனை வேண்டுமென்றே மறைக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல . பர்கூர் ஸ்டேசனில் நாங்கள் எழுதிக்கொடுத்தபிறகு தான் 01.10.2021 அக்ரிமெண்ட் எழுதிக்கொண்டோம் என்று சொன்னால் அப்போதே அந்த அக்ரிமெண்ட் போடப்பட்டது. என்னை போலீசார் விசாரித்த போது அந்த வாக்குமூலத்தில் என் கணவர் என்னிடம் விவாகரத்து கோரியதாக நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அவர் விவாகரத்து கேட்டதாக நான் சொல்லவில்லை . . நான் போலீஸ் விசாரணையில் என் கணவர் தனக்கு விவாகரத்து வேண்டுமென்று கேட்டார் , ரகுபதி தானே செலவு செய்து இரண்டு பேருக்கும் விவாகரத்து வாங்கி தருவதாக சொன்னார் என்று நான் போலீஸ் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான் . 01.10.2021 லே நோட்டரி முன்னிலையில் போட்டப்பட்ட ஒப்பந்ததில் குழந்தையை என் கணவரிடம் ஒப்படைப்பதாக அதில் உள்ளது என்றால் சரிதான்.

(15) அன்றைய தினமே நான் குழந்தையையும் , நகையும் ஒப்படைத்துவிட்டேன் என்று சொன்னனால் குழந்தையை ஒப்படைத்துவிட்டேன், நகை என்ன விவரம் என்று எனக்கு தெரியாது . போலீஸ் ஸ்டேசனில் என் அப்பா , அம்மா உடன் போவதாக எழுதிக்கொடுத்துவிட்டு ரகுபதியுடன் போவதற்கு ஏதேனும் குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்று சொன்னால் என் அப்பா அம்மா உடன்

வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் அதனால் ரகுபதியுடன் போய்விட்டேன். **எ.த.சா. ஆ.1** ஆவணத்தில் நான் எடுத்த முடிவிற்கு சம்பந்தம் தெரிவித்துதான் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று சொன்னால் என் அண்ணன் தம்பிகள் வரக்கூடாது என்று சொல்லிவிட்டதால் என் அப்பா , அம்மா அழைத்துச்செல்லவில்லை. 01.10.2021 ல் போலீஸ் ஸ்டேசனில் என் அப்பா , அம்மா உடன் போவதகாக சொல்லிவிட்டு , ரகுபதியுடன் சென்றுவிட்டேன் என்று சொன்னால் அப்பா , அம்மா உடன் சென்ற போது என் அண்ணன் தம்பி சண்டை போட்டதால் நான் ரகுபதியுடன் போய்விட்டேன் . ரகுபதி பெயின்டர் வேலை செய்து வந்தார். ரகுபதிக்கு சொந்த வீடு கிடையாது என்று சொன்னால் அவர் ஊரில் இருக்கிறது. ஓசூரில் அவர் வாடகை வீட்டில் தான் தங்கி இருந்தார்.

நாங்கள் வந்ததாக சொல்லும் டாடா சுமோ வண்டியும் ரகுபதியுடையது இல்லை என்றும் அது அவர் மாமா உடையது என்றால் சரிதான். எனக்கும் , ரகுபதிக்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டது என்று சொன்னால் ரகுபதி என் வீட்டுகாரரின் செந்தகார பையன் தான் அவ்வாறு தொடர்பு ஏற்பட்டது. சொந்தகாரர் என்ற விவரம் தெரியும், எந்த வகையில் சொந்தம் என்ற விவரம் தெரியாது . என்னுடைய புகாரிலோ , போலீஸ் விசாரணையிலோ ரகுபதி என் கணவருக்கு சொந்தகாரர் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் அந்த விவரத்தை குறிப்பிட்டேனா என்பது ஞாபகமில்லை. நான் சொல்லுவதுபோல் ரகுபதி என் கணவருக்கு உறவுகாரர் ஏதும் இல்லை என்றும், தகாத முறையில் ஏற்பட்ட பழக்கம் தான் ரகுபதியுடன் என்று சொன்னால் அவர் என் கணவரின் என்ற விவரம்

மட்டும் தெரியும். பத்தலப்பள்ளி ஊருக்கும் எனக்கும் ஏதேனும் சம்பந்தம் உள்ளதா என்று சொன்னால் அவ்வாறு ஏதும் சம்பந்தமில்லை . 04.10.2021 தேதி பத்தலப்பள்ளி ஊர் தலைவர் எங்களுடன் ஏன் வந்தார் என்று சொன்னால் ரகுபதி தரப்பில் வந்தவர்கள் அவரை அழைத்துவந்தார்கள். ரகுபதி தான் மற்றவர்களை அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

அந்த வேனில் நாங்கள் 6 பேர் பர்கூரில் இருந்து சூளகிரி வந்தோம். நான் , ரகுபதி, திம்மராயன் ,நந்தகுமார், சக்திவேல், ரகு மற்றும் பத்தலப்பள்ளி ஊர் தலைவர் ராஜப்பா ஆகிய 7 பேர் வந்தோம் என்று சொன்னால் சரிதான் . குடும்ப பிரச்சனைக்கு எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை அழைக்காமல் ஏன் மற்றவர்களை அழைத்து சென்றேன் என்று சொன்னால் என் அப்பா , அம்மா ஆகியோர் பர்கூர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டார்கள் , ரகுபதி அவர்கள் செந்தகாரர்களை அழைத்துக்கொண்டு அவர்களுடன் சேர்ந்து நானும் பர்கூர் வந்தேன் . நான் இந்த சம்பவத்திற்கு முன்பாக நந்தகுமார் , சக்திவேல், பத்தலப்பள்ளி ஊர்தலைவர் ராஜப்பா , திம்மராயன் ஆகியோரை தெரியுமா என்று சொன்னால் அவர்களை அன்றைய தினத்திற்கு முன்பாக தெரியாது.

ஏதற்காக இத்தனைபேரை அழைத்து வருகிறீர்கள் என்று ரகுபதியை கேட்டேனா என்று சொன்னால் கேட்டேன் ஏதாவது பிரச்சனை வந்ததால் இவர்கள் வந்து தடுப்பார்கள் என்று சொன்னார் . பிரச்சனை வரும் என்று தெரிந்து தான் ஆட்களை அழைத்துப்போனோம் என்று சொன்னால் அது தவறு. ரகுபதி தன்னுடன் ஆட்கள் இருக்கவேண்டும் என்று சொல்லி

அழைத்துப்போனார். என் கணவர் சம்பவத்தின்போது எங்கு பணிபுரிந்து வந்தார் என்று சொன்னால் அவர் அந்த சமயத்தில் பேக்கரியில் மாஸ்டராக இருந்தார். ஆனால் அவர் வீட்டில் தான் இருந்தார் . எந்த பேக்கரியில் பணிபுரிந்தார் என்று சொன்னால் எந்த பேக்கரியில் கூப்பிடுகிறார்களோ அங்கு போவார் . அவர்கள் வீட்டில் இருந்து கிருஷ்ணகிரி பஸ் ஸ்டேன்ட் வரவேண்டும் என்று சொன்னால் சம்பவம் நடந்ததாக சொல்லும் சாய் சரவணபவன் ஓட்டல் வழியாக தான் வரவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

01.10.2021 முதல் 04.10.2021 வரை குழந்தை கதிரேசனிடம் தான் இருந்து என்று சொன்னால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் குழந்தையுடன் வீடியோ காலில் பேசுவதற்கு நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான் . நாங்கள் இருவரும் பொதுவான ஒரு வக்கீலை ஏற்பாடு செய்து விவாகரத்து வாங்க முயற்சி எடுத்துக்கொண்டு இருந்தோம் என்றால் அது தவறு . ரகுபதி மூலம் நான் வழக்கறிஞர் ஒருவரை பார்த்தேனா என்று சொன்னால் அவ்வாறு ஏதும் பார்க்கவில்லை . எங்களுக்குள்ள பிரச்சனை 01.10.2021 லே முடித்துவிட்டது என்றால் சரிதான். ஆனால் 04.10.2021 ல் மீண்டும் பேச வேண்டும் என்று அழைத்தார்கள். எந்த இடத்திற்கு வரவேண்டும் என்று குறிபிட்டு அவர்கள் அழைக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல , பர்கூர் போலீஸ் ஸ்டேசன் எதிர்த்தார்போல் உள்ள பில்டிங் அருகே வரச்சொன்னார்கள் . என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் எந்த குறிப்பிட்ட இடத்திற்கு வரச்சொன்னார்கள் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை

என்றும், எந்த நபர் அவ்வாறு சொன்னார் என்ற விவரத்தையும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் 01 ம் தேதியை மறுபடியும் 04 ம் தேதி இந்த இடத்திற்கு வரவேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.

04.10.2021 அன்று பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்கள் என்று குறிப்பிடும் விவரங்கள் பொய்யானவை என்று சொன்னால் அது சரியல்ல . சம்பவம் நடந்ததாக சொல்லும் சாய்சரவணன் ஓட்டல் மக்கள் அதிகமாக புழுங்கக்கூடிய இடம் என்றால் சரிதான் . சாய் சரவண்ன் ஓட்டலுக்கு எதிர்த்தார்போல் என்ன உள்ளது என்று சொன்னால் ஒரு மசூதி உள்ளதாக நினைக்கிறேன். அந்த இடத்தில் ஒரு பிரிவு சாலை ஒன்று உள்ளது என்று சொன்னால் அந்த விவரம் ஞாபகமில்லை . 1ம் எதிரியுடைய வீடும் சம்பவ இடமும் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று சொன்னால் 1ம் எதிரி வீடு கீழ்பூங்குருத்தி , சம்வம் நடந்தது பயணப்பள்ளி சாய்சரவணன் ஓட்டல் அருகே . இதற்கு இடையே எவ்வளவு தூரம் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடமும், 1ம் எதிரி வீடும் அருகே தான் உள்ளதா என்று சொன்னால் அது அருகில் இல்லை . 04.10.2021 அன்றைக்கு நான் மற்றும் ரகுபதிகள் உடன் வந்த ஆட்களும் சேர்ந்து பிரச்சனை செய்வதற்காக தான் அன்றைய தினம் வந்திருந்தோம் என்று சொன்னால் அது தவறு.

அன்றைய தினம் குழந்தையை வழுக்கட்டாயமாக அழைத்துச்சென்று முதல் எதிரிடம் இருந்து அதிகமான ஜிவனாம்சம் தொகையை கேட்கவேண்டுமென்று ரகுபதியுடன் சேர்ந்து திட்டம்திட்டி இருந்தோம் என்று சொன்னால் அது தவறு. அந்த திட்டத்தை எல்லாம்

போலீசிடம் சொல்லிவிடுவோம் என்ற காரணத்திற்காக தான் நான் ரகுபதி உடைய குடும்பத்தார் கட்டுப்பாட்டில் உள்ளேன் என்றும் , அந்த காரணத்தினால் தான் என் குழந்தையை பார்ப்பதற்கு இன்றைய தேதி வரை எந்தவித முயற்சியும் நான் எடுக்கவில்லை என்று சொன்னால் அது தவறு . அன்றைய தினம் ரகுபதியை தாக்கி குழந்தையை எடுத்துச்செல்ல நான் முயன்றேன் என்றும் அந்த தள்ளுமுள்ளுவில் ரகுபதிக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. அன்றைய தினம் 1ம் எதிரியை நாங்கள் தான் முதல் முதலாக தாக்க முயன்றோம் என்று சொன்னால் அது தவறு . இந்த சம்பவம் நடந்த பிறகு உண்மை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் கலந்து ஆலோசித்துவிட்டு ஒரு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. அதனால் தான் 04.10.2021 அன்று ரகுபதியை யார் அடித்தார்கள் என்ற உண்மையை சொல்ல மறுக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

அன்றைய தினம் வேனில் போனபோது நான் எந்த சீட் உட்கார்ந்து இருந்தேன் என்று சொன்னால் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தேன். சம்பவம் இடத்தில் அடிதடி சம்பவம் சுமார் 5 நிமிடம் நடைபெற்றது. சம்பவம் நடந்தபோது நான் காரை விட்டு இறங்கிவிட்டேனா என்று சொன்னால் இறங்கிவிட்டேன் . நான் பாதுகாப்பிற்காக ஆட்களை அழைத்துப்போய் இருந்தேன் என்றும் அவர்களை என்னை பாத்துக்கொண்டார்கள் என்று சொன்னால் அது தவறு . பாதுகாத்து இருந்தால் ரகுபதியை காப்பாற்றி இருக்கலாம். சம்பவ பக்கத்திலுள்ள சாய்

சரவணா ஓட்டல் அருகே நிறைய வாகனங்கள் நின்றுக்கொண்டு இருந்தது என்று சொன்னால் சரிதான்.

நான் போலீஸ் விசராணையில் பயணப்பள்ளி அருகே போனபோது பின்னால் வந்த எதிரிகள் வேனின் முன்பக்க கண்ணாடியை தட்டி வண்டியை ஓரமாக நிறுத்தச்சொன்னார்கள் என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். வண்டியில் இருந்து இறங்க சொன்னதாகவும், கெட்ட வார்தையில் பேசியதாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் அது தவறு . என்னிடம் காட்டப்படும் என்னுடைய போலீஸ் விசாரணை வாக்குமூலத்தில் கெட்டவார்தையில் திட்டி இறங்கும்படி சொன்னதாக ஏதும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அதேபோல் கண்ணாடியை உடைத்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் அவ்வாறு தான் போலீசார் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ளது ஆனால் போலீஸ் விசாரணையின்போது நான் சொன்னேன் . அதேபோல் என் கணவர் என் கண்ணத்தில் அறைந்தார் என்ற விவரத்தையும் நான் போலீஸ் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் அது தவறு.

நான் சொன்ன மாதிரி, சொன்னவிதத்தில் , சொன்ன இடத்தில் , எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அதனால் தான் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு . அந்த இடத்தில் நடந்த உண்மையான விவரங்களை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு . அந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்று சொன்னால் சுமார் 1/4 மணி நேரம் அந்த இடத்தில்

இருந்து இருப்பேன். அங்கு இருந்தவர்கள் யாரும் போலீசாருக்கு தகவல் கொடுத்தார்களா என்றுசொன்னால் நாங்கள் தான் வந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோம்.

சான்று பொருள் 1 மற்றும் 2 ஆகியவை நாங்கள் எடுத்து வந்த ஆயுதங்கள் என்றால் அது தவறு . இந்த வழக்கில் நாங்கள் போய் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் முன்பாகவே போலீசார் விசாரணை தொடங்கிவிட்டார்கள் என்றால் அது தவறு. நான் இந்த வழக்கில் கொடுத்த புகாரானது முதல் தகவல் இல்லை என்று சொன்னால் அது தவறு . . இந்த வழக்கில் நான் சொன்ன நேரத்தில் , சொன்ன விதத்தில் , சொன்ன தேதியில் புகார் தயார் செய்யப்படவில்லை என்றால் அது தவறு . நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட விதமும் கலந்து ஆலோசித்துவிட்டு அதற்கு பிறகு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு . நான் சொந்தகுழந்தையை பணத்திற்கு கடத்த முற்பட்டபோது இந்த சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் அது தவறு. நடந்த சம்பவத்திற்கு என்னுடைய நடவடிக்கை தான் முழு காரணம் என்று சொன்னால் அது தவறு.

**<u>மறு விசாரணை: இல்லை.</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.01.28 12:28:10 +0530